ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 1/2023 LW- 4 PW- 4

| | |
|---|---|
| Name | : வெள்ளையம்மாள் (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : சின்னு |
| Village | : துவராபதி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 75/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of September 2025

( 1 முதல் 7 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து வீட்டுக் குடித்தனம் செய்து வருகிறேன். அ.சா.1 என் பேரன். வழக்கின் எதிரிகளை தெரியும். கடந்த 5 1/2 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு 10.00 மணியளவில் எங்கள் வீட்டிற்குள் இருந்தபோது, எதிரிகள் 7 பேரும் எங்கள் வீட்டிற்குள் நுழைந்து என் பேரன் தங்கபாண்டியையும், பேத்தி தனலெட்சுமியையும் கம்பு, தடிகளை கொண்டு அடித்தும், காலால் மிதித்தும் காயப்படுத்தினார்கள். அதில் அ.சா.1க்கு முதுகு மற்றும் உடம்பில் காயமும், தனலெட்சுமியை நைட்டியை கிழித்தும் அடி வயிறு மற்றும் இடுப்புக்கு கீழ் பகுதிகளில் மிதித்து ரத்தக் கட்டு காயங்களை ஏற்படுத்தினார்கள். பின்னர் நாங்கள் வந்து சத்தம்போட்டு விலக்கிவிட்டோம். விலக்கிவிட்டபோது என்னைக்கு இருந்தாலும் உன்னைக் கொல்லுவது நாங்கள்தான் என்று தங்கபாண்டியை மிரட்டிவிட்டு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் முடித்து வைக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.25 14:42:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்

ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 1/2023 LW- 6 PW- 5

| | |
|---|---|
| Name | : தங்கராஜ் (கண்ணுற்ற சாட்சி) |
| Father's/Husband's Name | : சின்னு |
| Village | : துவராபதி |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 54/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of September 2025

( 1 முதல் 7 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என் மகன். வழக்கின் எதிரிகள் 7 பேரையும் தெரியும். சுமார் 5 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் இரவு 10.00 மணியளவில் எங்கள் வீட்டின் அருகில் உள்ள என் அம்மா வீட்டில் நான் டி.வி. பார்த்துக் கொண்டிருந்தபோது எங்கள் வீட்டில் அலறல் சத்தம் கேட்டு போய் பார்த்தபோது, எதிரிகள் 7 பேரும் எங்கள் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து என் மகன் தங்கபாண்டியை கம்பால் அடித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது விலக்குவதற்கு சென்ற என் மகள் தனலெட்சுமியின் நைட்டியை பிடித்து இழுத்து கம்பால் தொடையில் அடித்து காயப்படுத்திக் கொண்டிருந்தபோது நான் சென்று விலக்கிவிட்டேன். அப்போது எதிரிகள் தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசி, என்னைக்கு இருந்தாலும்

உன் சாவு எங்கள் கையில்தான் என்று என் மகனைப் பார்த்து மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் முடித்து வைக்கப்பட்டது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.09.25 14:42:54 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்